**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW4**

Deposition of the witness of **LW12**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சத்தியானந்தம் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.கதிர்வேல் | Occupation | விவசாயம் |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **12.02.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன். ஆஜர் எதிரிகளில் 3-ம் எதிரியை மட்டும் எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்த நாகேந்திரன் மற்றும் காயம்பட்ட ரகுவரன் ஆகிய இருவரும் என் ஊரை சேர்ந்தவர்கள். 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்ற போது இரவு 8.00 மணியளவில் சுமார் 100, 200 நபர்கள் நடனமாடி கொண்டு சாமி ஊர்வலத்தில் சென்றார்கள். அந்த சமயத்தில் நான் ஆற்காட்லிருந்து எங்கள் கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தேன். நான் எங்கள் ஊருக்குள் சென்ற போது ஏதோ காரணத்திற்காக திருவிழா நடன ஊர்வலத்தில் தள்ளு முள்ளு ஏற்பட்டதில் கீழே உடைந்து கிடைந்த பீர் பாட்டிலில் நாகேந்திரன் மற்றும் ரகுவரன் ஆகிய இருவரும் விழுந்துவிட்டதாகவும், அதனால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும் கேள்விப்பட்டேன். காயம்பட்ட இருவரையும் சிகிச்சைக்காக இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு கொண்டுசென்றதாக கேள்விப்பட்டேன். நாகேந்திரன் இறந்துவிட்டதாக ஊர்காரர்கள் தகவல் சொன்னார்கள். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர் திருவிழாவில் நடந்த நடன ஊர்வலத்தில் கலந்து கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்த போது இந்த விவரத்தை தான் சொன்னேன்.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது 27.07.2021–ம் தேதி நடைபெற்ற திருவிழாவின் போது இரவு 8.00 மணிக்கு சாமி ஊர்வலம் நடந்ததாகவும், அந்த ஊர்வலத்தில் நானும், என் ஊர்காரர்களும் கலந்துகொண்டு நடந்து வந்ததாகவும், அப்போது எங்கள் ஊரை சேர்ந்த கிரிவாசனுடன் இருந்த 4 நபர்கள் சாமி ஊர்வலத்தில் நடனம் ஆடியதால் எங்கள் ஊரை சேர்ந்த ரகுவரன், நாகேந்திரன் ஆகிய இருவரும் அவர்களை பார்த்து நடனம் ஆட கூடாது என்று சொன்னதாகவும், அதற்கு அந்த நபர்கள் நடனம் ஆடுவதை நிறுத்திவிட்டதாகவும், அதன் பிறகு கிரிவாசன் ரகுவரனிடம் நீங்கள் என்னடா செல்வது போங்கடா என்று சொன்ன போது ஊர்காரர்கள் கிரிவாசனிடம் வெளியாட்கள் நடனம் ஆட கூடாது என்று சொல்லிவிட்டு வந்ததாகவும், அன்று இரவு 9.00 மணிக்கு சாமி ஊர்வலம் பேருந்து நிறுத்ததிடம் சென்ற போது கிரிவாசன் அவருடைய நண்பர்கள் அரிஷ், ஹேமபிரசாத், அன்பரசன், கார்த்தி ஆகியோர் ரகுவரனை பார்த்து எங்களையாட நடனம் ஆடக் கூடாது என சொல்கிறீர்கள் என்று சொன்ன போது ரகுவரனும், நாகேந்திரனும் பேருந்து நிலையம் உள்ளே சென்றதாகவும், அப்போது கிரிவாசன் ரகுவரனை பார்த்து இவன் உயிரோடு இருக்க கூடாது ஊர்காரர்கள் முன்னாடி என் மானத்தை வாங்கிவிட்டான் இவனை போட்டு தள்ளுங்கடா என்று சொன்னவுடன் ஹேமபிரசாத் என்பவர் தீடீரென பேருந்து நிலையத்திலுள்ள நிழற்குடை உள்ளே இருந்த பிராந்தி பாட்டிலை உடைத்து ரகுவரனை குத்த வந்த போது நாங்கள் தடுக்க போனதாகவும், அப்போது ஹேமபிரசாத் அவர் கையில் வைத்திருந்த உடைந்த பிராந்தி பாட்டிலால் நாகேந்திரனின் கழுத்தில் ஓங்கி குத்தியதாகவும், கிரிவாசன் அவனையும் குத்துங்கடா என்று ரகுவரனை பார்த்து சொன்னவுடன் கார்த்தி என்பவர் அங்கிருந்த வேறு பிராந்தி பாட்டிலை உடைத்து ரகுவரனின் கையில் குத்தியதால் இடது கை மணிக்கட்டில் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், ரகுவரனை அவருடைய தந்தை இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அதே நேரத்தில் காயம்பட்ட நாகேந்திரனையும் எஸ்.எம்.எஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், நாகேந்திரன் இறந்துவிட்டதாக அங்கு பரிசோதித்த மருத்துவர் கூறியதாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.